பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 03

வெள்ளிக்கிழமை
29 நவம்பர் 2024

கார்த்திகை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## வடமராட்சியில் மினி சூறாவளி

யாழ்ப்பாணம், நவ. 29
வடமராட்சி கரையோரப் பகுதிகள் சிலவற்றில் நேற்றுமுன்தினம் இரவு மினி சூறாவளி வீசியுள்ளது. 12

# ‘பெங்கால்’ புயலின் ஆபத்து நீங்குகிறது

### இன்று நள்ளிரவுமுதல் வலுவிழக்கும் நாளை மாலைக்குள் கரையைக் கடக்கும்

**யாழ்ப்பாணம், நவம்பர் 29**

**வங்கக் கடலில் உருவாகி, கடந்த இரண்டு தினங்களாக வடக்குக் கடற்பரப்புகளுக்கு அருகாக நகர்ந்து கொண்டிருந்த பெங்கால் புயல், இன்று நள்ளிரவு முதல் வலுவிழக்கும் என்றும் நாளை மாலைக்குள் அல்லது இரவுக்குள் இந்தியாவின் தென் மாநிலத்தில் கரையைக் கடக்கும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் பாலச்சந்திரன் கூறியுள்ளார்.** 11

## வடக்கில் நேற்று கடுங் குளிர்

### இடைத்தங்கல் முகாம்களில் மக்கள் தொடர்ந்து தஞ்சம்

யாழ்ப்பாணம், நவ. 29
வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய தொடர்ச்சியான மழையுடனான காலநிலை நேற்று விலகியது. எனினும், கடும் குளிரான காலநிலை தொடர்ந்தது. இதனால், இடைத்தங்கல் முகாம்களிலேயே மக்கள் 11

## போதைக்கு அடிமையானோர் உயிர்மாய்ப்பு உயர்வு 03

### உள்ளூராட்சித் தேர்தல்:

## இப்போதைக்கு இல்லை 12



நெடுந்தீவிலிருந்து யாழுக்கு

## ஹெலிகொப்டரில் நேற்று வந்தனர் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், நவ. 29
வெள்ளப் பேரிடர் காரணமாக, நெடுந்தீவுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், ஹெலிகொப்டர் மூலமாக மூன்று நோயாளர்கள் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். 12

வெள்ளப் பேரிடரால்

## மீண்டும் பிற்போடப்பட்ட உ/த பரீட்சை

கொழும்பு, நவ. 29
சீரற்ற காலநிலையால், மாணவர்கள் உளரீதியாகப் பலமடைய வேண்டும் என்பதற்காக உயர்தரப்பரீட்சை மேலும் மூன்று நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது பரீட்சை 11



படையினர் வசமுள்ள

## காணிகள் அனைத்தும் 5 வருடங்களில் விடுவிப்பு

### பாதுகாப்புச் செயலர் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29
தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் நிறைவடைய முன்னர் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள் 11

### மகாகச்சகொடிக் குளம்;

## தவறி வீழ்ந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்!

வவுனியா, நவ. 29
வவுனியா, மகாகச்சகொடிக் குளத்தில் கடந்த 26ஆம் திகதி தவறி விழுந்த இளைஞர், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

## கொள்கை விளக்க உரை: நாடாளுமன்றில் விவாதம்! 12

## சீரற்ற காலநிலையால் 377,500 பேர் பாதிப்பு!

கொழும்பு, நவ. 29
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 52 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 77 ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ 11



‘காணாமல் போன உந்தச் சூரியனை இனி பாக்கலாமெண்டு சொல்லுங்கோ’

அநுரவின் தலைமையில்

## சீனாவுடனான உறவை பலப்படுத்த எதிர்பார்ப்பு

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சியின் கீழ் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் 11

முறையான பராமரிப்பின்மை

## தொன் கணக்கான குப்பைகள் பேரிடரால் கடலுடன் கலந்தன

யாழ்ப்பாணம், நவ. 29
சாவகச்சேரி நகரசபை திண்மக் கழிவகற்றும் நிலையத்தில் சேர்க்கப்பட்டுவந்த குப்பைகளும் கழிவுகளும், வெள்ளப் பெருக்குக் காரணமாக கடலுடன் கலந்துள்ளன என்று அந்தப் பகுதி பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
குப்பைகளைச் சேகரித்து முறையான அடைப்பு இல்லாமல் பராமரித்ததன் விளைவாகவே குப்பைகள் யாவும் கடலுடன் கலந்துள்ளன என்றும், இதனால் 11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பாதிப்புற்றோருக்கு உடனடி நிவாரணங்கள்!



## ஜனாதிபதி பணிப்பு

**கொழும்பு, நவ. 29**

**அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ள பிரதேசங்களுக்குச் சென்று தகவல்களை பெற்றுக்கொண்டு, மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

அதற்காக கீழ் மட்டத்திலிருந்து வலுவான பொறிமுறையொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அரச அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைத்து தேவையான உணவு மற்றும் மலசலகூட வசதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

அந்த மக்களுக்கு உதவி வழங்கத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக அதிக ஆபத்தை எதிர்கொண்ட வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

# படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிக்குக

## ஜனாதிபதிக்கு செல்வம் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 29

மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் காணப்படும் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீளக் கையளிக்கக் கோரி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம், தலைமன்னார் பியர் பள்ளிமுனை, வங்காலை ஆகிய கிராமங்களில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. குறிப்பாக முள்ளிக்குளத்திலுள்ள மக்களின் விளைநிலங்கள் மற்றும் குடியிருப்புக் காணிகள், தலைமன்னார் பியரிலுள்ள சதசகாய அன்னையின் கிறிஸ்தவ தேவாலயத்துக்குச் சொந்தமான காணிகள், வங்காலை நானாட்டான் வீதியின் ஓரத்தில் உள்ள தனிநபர்களின் காணிகள் மற்றும் பள்ளி முனையில் குடியிருப்புக் காணிகள் ஆகியவை விடுவிக்கப்படாமலுள்ளன. பள்ளிமுனை கடற்படை முகாம் அமைக்கப்பட்ட பகுதி மக்களின் குடியிருப்புப் பகுதிகளுக்குச் சொந்தமான காணியாகும்.

எனவே மன்னார் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவித்து மக்கள் தமது சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழ வழிவகை செய்யவேண்டும் - என்றுள்ளது. (ச-56)



# கீழ்மட்டத்துக்கு இறங்குவோம்

கொழும்பு, நவ.29

உள்ளூராட்சிசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு கிராம மட்டங்களில் ஆழமாக காலூன்ற வேண்டியுள்ளது எனவும், இதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறும் கட்சி சகாக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை வழங்கியுள்ளார்.

கீழ்மட்ட அரசியல் இயந்திரம் வலுவாக இருப்பதாலும், ஏற்பாட்டு சக்தி பலமாக இருப்பதாலுமே தேசிய மக்கள் சக்தியால் ஆட்சியை பிடிக்க முடிந்தது. எனவே, கீழ்மட்ட அரசியல் இயந்திரத்தை கட்டாயம் வலுப்படுத்தியாக வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-44)

# உழவியந்திரம் கவிழ்ந்து அனர்த்தம் அறுவரின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, நவ. 29

காரைதீவு, மாவடிப்பள்ளி பகுதியில் உழவியந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் மேலும் இருவரின் சடலங்கள் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களில் ஒருவர் மத்ரஸா மாணவர் என்பதுடன், மற்றையவர் உழவு இயந்திரத்தின் சாரதியாக இருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இந்த விபத்தில் இதுவரை அறுவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ச-இ)



# விரிவுரையாளர் வெற்றிடம் விரைவில் நிரப்பப்படும்

கொழும்பு, நவ. 29

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் எனப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் சதுரத்தே இலங்க சிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

600 விரிவுரையாளர்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையில் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர். 300 பேர் கலாநிதி பட்டப்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

குறைந்த சம்பளம், வருமான வரி போன்ற காரணங்களால் பலர் கலாநிதி பட்டப்படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர்.

இதனால் பல்வேறு துறைகளிலும் விரிவுரையாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அரசாங்கமும் புதிய நியமனங்களை நிறுத்தியுள்ளது இருப்பினும் விரைவில் விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு, நவ. 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கு அமைவான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சுற்றாடல் அமைச்சின் செயலாளராக கே.ஆர்.உடுவாவல, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக வை.எல்.மொஹமட் நவாவி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# நாமலுக்கு பொறுப்பு

கொழும்பு, நவ.29

உள்ளூராட்சிசபைத் தேர்தலின்போதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை நாமல் ராஜபக்சவே வழிநடத்துவார் என்று அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல்நாள் அமெரிக்கா பறந்த மொட்டுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் பஸில் ராஜபக்ச, பொதுத்தேர்தலின்போதும் கூட நாடு திரும்பவில்லை.

இதனால் பொதுத்தேர்தலை நாமல் ராஜபக்சவே வழிநடத்தினார். இந்த நிலையில் உள்ளூராட்சிசபைத் தேர்தலை கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்சவே [illegible] தெரி[illegible]. (ச-இ)

# மின்சாரம் தாக்கி தாய் சாவு

கொழும்பு, நவ.29

அநுராதபுரம், கல்கிரியாகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மின்சாரம் தாக்கி இரண்டு பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிரியாகம, புப்போகம பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய தாய் ஒருவரே உயிரிழந்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெதுரு ஓயாவின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு, நவ. 29

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால், நிக்கவெரட்டிய, சிலாபம், ஆராச்சிக்கட்டுவ, பிங்கிரிய, வாரியபொல மற்றும் கொபேகனே ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)



# போதைக்கு அடிமையாகிய உயிர்மாய்ப்பு உயர்வு

கொழும்பு, நவ. 29

**நாட்டில் அதிகளவில் உயிரைமாய்த்துக் கொள்வோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்திலுள்ள மருத்துவமனையொன்றில் 10 பேர் வரை உயிர் மாய்த்துக் கொண்டனர்.

இவர்கள் அனைவரும் 16 மற்றும் 65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்களில் 4 பேர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் பயன்பாடானது உடல் ஆற்றலை அதிகரிப்பதுடன், குழப்பம், பதற்றம், விரைவான இதயத்துடிப்பு உள்ளிட்ட உடல் நலப்பாதிப்புகளை ஏற்படுத்துவதாக சுகாதாரத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தூக்கமின்மை, நினைவாற்றல் இழப்பு உள்ளிட்ட உடல் நலப்பிரச்சினைகள் ஏற்படுகின்றமையால் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரிப்பதாக மருத்துவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-இ)



## இஸ்ஸதீன் காலமானார்

கொழும்பு, நவ. 29

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீன் அக்கரைப்பற்றில் நேற்றுக் காலமானார்.

இவர் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலாவது எதிர்க்கட்சித் தலைவராவார். வேதாந்தி என்று அனைவராலும் அறியப்பட்ட இவர், ஊடகத்துறையின் முன்னாள் பிரதி அமைச்சராகவும் இருந்துள்ளார். (ச-இ)

## 'பெட்டி மல்லி' கைது



கொழும்பு, நவ.29

பிரபல போதைப்பொருள் கடத்தல் காரரான 'பெட்டி மல்லி' என்பவர் பயாகல பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

## 'அஸ்வெசும' விண்ணப்பம் காலவகாசம் மேலும் நீடிப்பு!

கொழும்பு, நவ. 29

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட காலஅவகாசம் மீண்டும் ஒருமுறை நீட்டிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையை கருத்திற்கொண்டு இந்த காலவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிவாரணத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட அவகாசத்தை டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை நீடிக்க நலன்புரி நன்மைகள்சபை தீர்மானித்துள்ளது. (ச-இ)

## இளைஞர்களிடையே எச்.ஐ.வி. தொற்று

கொழும்பு, நவ. 29

நாட்டில் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமூக ஆரோக்கியம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வித்தியா குமாரி பேல் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த 2023 ஆண்டில் 694 எய்ட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 15 சதவீதமானோர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இளைஞர்கள் மற்றும் யுவதிகளே எய்ட்ஸ் நோயினால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் கையடக்கத் தொலைபேசி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் உருவாகும் புதிய உறவு முறைகள் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)




'நாங்கள் எப்பவும் மக்களோட தான் இருப்பம். அவையின்ர துன்ப துயரங்களைத் துடைக்கத் தான் நாங்கள் எலக்சனில நிக்கிறம். மற்றப்படி எங்களுக்கு பதவி வேணுமெண்டதுக்காக நிக்கேலை. ஒருவேளை இந்த எலக்சனில நாங்கள் தோத்தாலும், மக்களுக்கான எங்கட பணி தொடரும்' இப்பிடி கொஞ்ச நாளைக்கு முதல் எந்தப் பக்கம் திரும்பினாலும் வேட்பாளர்களின்ர வாக்குறுதிமழை பொழிஞ்சு தள்ளினது. ஆனால் இப்ப காத்தடிக்குது, புயலடிக்குது, மழையுமடிக்குது. ஆனால் தேர்தலில தோத்தாலும் எங்கட துயரங்களைக் கை உளையும் வரை துடைச்சுக் கொண்டே இருப்பம் எண்டு சொன்ன வேட்பாளர்மாரைத்தான் காணக் கிடைக்குதில்லை.

எலக்சன் முடிவு வந்த அடுத்த செக்கனில இருந்து உந்த வேட்பாளர்மாரெல்லாம், துண்டைக் காணம், துணியைக் காணம் எண்டு ஓடித்தள்ளிட்டினமோ? இல்லாட்டி வாயைத் திறந்தால் சனத்துக்கு இந்தநேரத்தில ஏதும் உதவி செய்யவேண்டி வந்திடுமோ எண்ட பயத்திலை ஊமையாளாகிட்டினமோ தெரியேலை. ஆனாலும், உவையளை நம்பி வாக்களிக்கிறதும் மண் குதிரையை நம்பி ஆத்தில இறங்கிறதும் ஒண்டு தான் எண்டதைக் கண்டுபிடிச்ச சனங்கள் உண்மையிலேயே கெட்டிக்காரர்தான்.

ஒருவேளை இப்ப பெய்யிற மழையும், அடிக்கிற புயலும் எலக்சன் காலத்தில வந்திருந்தா என்ன நடந்திருக்குமெண்டு ஒருக்கா நினைச்சுப் பாருங்கோ. எல்லா வேட்பாளர்மாரும் ஒருகையில குடையும், இன்னொரு கையில நிவாரணச் சாமானும் சுமந்தபடி வெள்ளத்துக்குள்ள வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு இறங்கி படங்கள் எடுத்து போட்டிருப்பினம். சனங்களுக்கும் ஒரே நிவாரண மழை போதும் போதும் எண்டுற அளவுக்குப் பொழிஞ்சு தள்ளியிருக்கும். என்ன செய்யிறது எங்கடசனங்களுக்குஎலக்சன்முடிஞ்சபிறகுதான் உந்தக் காத்து, மழையெல்லாம் வந்து கஷ்டப்படுத்தோணுமெண்டு விதி இருக்குது போல. இனிமேல் எலக்சன் காலத்தில தான் இப்பிடி இயற்கை அழிவுகள் இஞ்ச வரோணும் எண்டு இனிமேலாவது கோயில்களில நேர்த்தி வையுங்கோ. அப்பதான் என்ன அழிவு வந்தாலும், அதைவிடக் கூடுதலா உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். எலக்சன் முடிஞ்சுதோ, உங்களை ஏன் நாயெண்டும் ஒரு வேட்பாளரும் எட்டியும் பாக்காயினம். தோத்த ஆக்கள் தான் இப்பிடியெண்டால், எலக்சனில வெண்டவை கூட பாதிக்கப்பட்ட சனத்தை எட்டிப்பாக்கேலை எண்டு கதை. இப்பிடி சனத்தை தள்ளிவைச்சால் பிறகு சனங்கள் உவையளைத் தள்ளி வைச்சிடுமெண்டது உவையளுக்கு விளங்கினால் சரி.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கக் கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். குடும்பப் பொறுப்புகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பயணங்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் உண்டாகும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**சிம்மம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். துணிச்சலுடன் முடிவு எடுப்பீர்கள். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அலைச்சலும் சோர்வும் உண்டாகும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாளாக இருக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம் :** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**தனுசு:** புதிய முயற்சி இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** அதிர்ஷ்டம் தரும் நாளாக இருக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும்.



# அதிகூடிய மழைவீழ்ச்சி திருநெல்வேலியில் பதிவு

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கையிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சி யாழ்ப்பாணம்திருநெல்வேலியில் பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் திருநெல்வேலியில் 253.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குறித்த காலப் பகுதியில் யாழ்.அச்சுவேலியில் 245.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரத்தில் 240.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 214 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 212.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டையில் 196.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், பருத்தித்துறையில் 190 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 175.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 161.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 99.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-66)

# ஏ - 9 வீதி வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 29

சீரற்ற வானிலை காரணமாகப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம் ஏ - 9 வீதி தற்போது மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமோட்டை மற்றும் ஓமந்தை நகரம் ஆகிய பகுதிகளில் ஏ - 9 பிரதான வீதியின் ஊடாக அதிகளவில் வெள்ள நீர் வடிந்தோடியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தற்போது வெள்ள நீர் குறைவடைந்துள்ளதால் குறித்த போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# வெள்ளநீர் வெளியேற்றல்

யாழ்ப்பாணம், நவ.29

வலி. மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

வடிகால் அமைப்புச்சபையின் செயலாளர் ச.பாலரூபன் தலைமையில் இந்தப் பணி இடம்பெற்றது.

அதன்படி சுழிபுரம் பகுதியில் அமைந்துள்ள பெரியதம்பிரான் பிரதான வீதியில் தேங்கியுள்ள வெள்ளம், சபையின் ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் வெளியேற்றப்பட்டது. (ச-125)





# முல்லைத்தீவில் வீட்டினுள் சிறுத்தை

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு, விசுவமடு இளங்கோபுரம் பகுதியில் சிறுத்தைப்புலி ஒன்று வீடு ஒன்றுக்குள் புகுந்த சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

அதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து திணைக்களத்தின் அதிகாரிகள் குறித்த புலியை மீட்டுக் கொண்டு சென்றுள்ளனர். தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் காடுகளுக்கு அண்மையில் இருப்பவர்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கையின் பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர வழிகாட்டிகளில் ஒருவரான தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 35 ஆவது வருட நினைவுதினக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசியக் கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மலையகப் பிராந்தியச் செயலாளர் டேவிட் சுரேன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் பிரதான கருத்துரையை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ம. திருவரங்கன் " ஆட்சி மாற்றமும் இலங்கை இடதுசாரிகளின் எதிர்காலமும்" எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்கவேண்டும்.

– தியோடர் ருஸ்வெல்ற்

# வெள்ளம் வந்த பின்னே.....!

வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கம் புயலாக மாற்றம் பெற்றிருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகின்றது. கனமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் உட்படப் பல இடங்களில் வெள்ளப் பேரிடர் ஏற்பட்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி - பாதுகாப்பான இடங்களில் -தற்காலிகத் தங்குமிடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். கனமழை காரணமாக பெரும்பாலான நீர்நிலைகள், குளங்கள் நிரம்பிவிட்டன. பல குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றாலும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் மட்டும் வெள்ள இடரால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மேல் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முதற்கட்ட உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. வானிலை இன்னமும் சீராகாதநிலையில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை இன்னமும் அதிகரிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு நடந்தால் அதைச் சமாளிப்பது கடினமாகவே இருக்கப்போகின்றது. யாழ்ப்பாணத்தில் 20 ஆயிரம் குடும்பங்களைப் பராமரிப்பதற்கான வசதிகளே இருக்கின்றன என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா கூறியிருக்கின்றார். பெரும் இக்கட்டின் மத்தியிலேயே இந்த இடரைச் சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது ஏற்பட்டிருக்கும் வெள்ளப் பாதிப்புத் தொடர்பாக பொதுமக்களும் விழிப்புடன் செயற்பட வேண்டியிருக்கின்றது. நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பியிருக்கும் நிலையில் பல இடங்களில் சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதும் சிக்கலாக மாறியிருக்கின்றது. வெள்ளப் பாதிப்பைத் தொடர்ந்து தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் இருப்பதால், அதுதொடர்பாகவும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய தேவையிருக்கின்றது. துறைசார்ந்த அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக பொதுமக்களும் இவை தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் மட்டுமே இந்தநிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமுடியும். நிரம்பியுள்ள நீர்நிலைகள், குளங்களை வேடிக்கை பார்க்கச் செல்வதை தவிர்த்துக்கொள்வது தேவையற்ற அனர்த்தங்களைத் தடுக்கும். வீடுகளில் உள்ள சிறுவர்கள், குழந்தைகள் விடயத்தில் இந்தக் காலப் பகுதியில் பெற்றோர் கூடுதல் கவனம் கொண்டிருத்தல் அவசியம். கடந்தகாலங்களில் நடந்த அனர்த்தங்கள் - அநியாய உயிரிழப்புகள் மீண்டும் நடக்காதிருப்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தற்போது ஏற்பட்டிருக்கும் வெள்ள நிலைமை பல இடங்களில் வடிகாலமைப்பு முறைகளை மாற்றியமைக்க வேண்டிய - உருவாக்கவேண்டிய தேவையை உணர்த்தியிருக்கின்றது. வடக்கு மாகாண ஆளுநரும் அதை உணர்ந்து வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கும் சட்டவிரோதக் கட்டடங்களை அகற்ற வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதே நேரம், பல இடங்களில் வீதிகள் உயர்த்தப்பட்டுள்ளதால் வெள்ளம் வடிந்தோட முடியாத நிலைமை உள்ளதையும் காணமுடிகின்றது. அவற்றுக்கான வடிகால் அமைப்புகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியம். இந்த நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்படாதுவிட்டாலும், பேச்சளவில் நின்றுவிடாது எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவேண்டியது அவசிய மாகும். அதன்மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான பெரும் வெள்ள இடர் ஏற்படுவதைத் தடுக்கமுடியும்.

இப்போது ஏற்பட்டிருக்கும் இடர்நிலைமை எதிர்பார்த்ததை விடவும் மிக அதிகம். அரச அதிகாரிகள் குறைந்தபட்ச வளங்களுடன் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்கின்றனர். இவ்வாறான இடர்நிலைமையில் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே விரைவாக இயல்பு நிலைமைக்குத் திரும்பமுடியும். அதை உணர்ந்து சமூகப் பொறுப்புடன் ஒவ்வொருவரும் நடந்துகொள்வது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# அதானியின் முதலீடுகள்; அநுர அரசு பரிசீலனை!



**கொழும்பு, நவ. 29**

**நிதி மோசடி குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்திய கோடீஸ்வரரான கௌதம் அதானியின் இலங்கை முதலீடு குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் அதானியின் தற்போதைய திட்டங்களை அரசாங்கம் மீளாய்வு செய்து வருகிறது. குறித்த திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை.

மேலதிக மதிப்பீட்டுக்காக தொடர்புடைய அமைச்சுக்களிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மன்னாரிலும், பூநகரியிலும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டங்களுக்காக அதானி குழுமம் 442 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. இந்த முதலீடானது இலங்கையில் அதானி குழுமத்தின் இரண்டு பெரிய திட்டங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பொலிஸ் இணையம் புதுப்பிப்பு

கொழும்பு, நவ.29

பொதுமக்களுக்கு உதவுவதற்கான பிரதான அம்சங்களை அணுகக்கூடிய வகையில் இலங்கை பொலிஸ்தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தை புதுப்பித்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட இணையத்தளம் www.police.lk நேற்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-இ)

## சட்டக்கல்லூரி பரீட்சை பிற்போடல்

கொழும்பு, நவ.29

டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த இலங்கை சட்டக் கல்லூரி பொது நுழைவுப் பரீட்சையை பிற்போடுவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையே இதற்கு காரணமாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமத் ஜயசுந்தர தெரிவித்தார். (ச-இ)



## சிங்கப்பூரால் இலங்கைக்கு டீசல்

கொழும்பு, நவ. 29

இலங்கைக்கான டீசல் வழங்குவதற்கான ஒப்பந்தத்தை, சிங்கப்பூரின் பிபி எனர்ஜி நிறுவனம் வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரையிலான, 6 மாத காலத்துக்கு இலங்கைக்கான டீசலை அந்த நிறுவனம் வழங்கும். (ச-இ)

## ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, நவ. 29

சீரற்ற வானிலை காரணமாக இன்றைய தினம்பலரயில்சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - பதுளை ரயில் மார்க்கத்தின் ஊடானசேவைநானுஓயா வரை இடம்பெறுவதாகவும் கூறப்பட்டது. (ச-இ)

நாளை
சனிக்கிழமை - கார்த்திகை - 15
30.11.2024
சுபநேரம் : 03.14 - 04.43
ராகுகாலம் : 09.14 -10.44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் வீடுகளுக்குள் முடக்கம்

யாழ்ப்பாணம், நவ.29

கடும்மழை, காற்று என்பவற்றால் யாழ். மாவட்டத்தில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நேற்று முன்தினம் பணியாளர்களின் வரவு மிகக் குறைந்துள்ளதோடு, போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டு காணப்பட்டன. வர்த்தக நிலையங்கள் சில பூட்டப்பட்டதோடு மக்களும் வீடுகளுக்குள் தஞ்சமடைந்திருந்தனர். (ரி-45-17)

# அலுவலர்கள் களத்தில் பணியாற்றவேண்டும்!

## பிரதியமைச்சர் உபாலி தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 29**

**வெள்ளப் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் களத்தில் இறங்கி கடினமாகப் பணியாற்ற வேண்டும் என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

வெள்ளநிலைமை தொடர்பாக ஆராயும் கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடர் அனர்த்த பாதிப்புகளிலிருந்து விடுபடுவதற்கு அரசியல் பேதமின்றி நாம் அனைவரும் ஒன்றாக உழைக்கவேண்டும். அரச உத்தியோகத்தர்கள் என்ற வகையில் நீங்கள் இந்த விடயத்தில் சற்று கடினமாகப் பணியாற்ற வேண்டும்.

இதில் இருந்து விடுபடுவதற்கு அரசாங்கத்திடம் இருந்து நிதி உட்பட வேறு எவ்வாறான விடயங்கள் தேவையெனில் அதில் தலையிடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார். (ச-110)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன. (ச-25,9)



அரியாலை, புங்கங்குளம் பிரதேச ஏ -9 வீதியில் மரம் வீழ்ந்ததில் ஏ- 9 வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் வேறு மார்க்கத்தில் பயணித்தன. (ச- 25, 9,100)



## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்க யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஈஸ்வரன் தலைமையில் கைதடியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டதோடு, மாவீரர்களின் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-45-27)



## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், நவ, 29

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வலுவூட்டல் தொடர்பாக விளக்கமளிக்கும் பயிற்சிப்பட்டறை, பிரதேச செயலாளர் தலைமையில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றது. கருத்திட்ட முகாமையாளர் திருமதி போ.சாரதா வளவாளராகக் கலந்து கொண்டார். (ச-25,9)





# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் தலைவர் பிறந்தநாள் நிகழ்வும்!

யாழ்ப்பாணம், நவ.29

மண்ணுக்காக தமது உயிரை அர்ப்பணித்த மாவீரர்களை பெற்றெடுத்த பெற்றோரைக் கௌரவப்படுத்தும் நிகழ்வும், தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டமும் அராலி சிறீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இதன்போது உயிர்நீத்த உறவுகளது திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர்களின் பெற்றோருக்கு நினைவுச் சின்னமாக தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இறுதியாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70-ஆவது பிறந்தநாளானது கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சேனாதிராஜா கலையமுதன், மாவீரர்களின் பெற்றோர், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (ச-25, 27)



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் ஒரு தொகுதி அனர்த்த நிவாரணப் பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டன. (ச -25, 9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகள் மூடல்

கொழும்பு, நவ. 29
வடமத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட 1,480 முன்பள்ளி களை நேற்றுமுன்தினம் முதல் மறுஅறிவித்தல்வரை மூடுவ தற்குத் தீர்மானித்துள்ளதாக மாகாண ஆரம்ப குழந்தைப் பருவ அதிகாரசபையின் முகா மைத்துவப் பணிப்பாளர் நிலந்த ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.
சீரற்ற வானிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மீட்புப் பணியில் இராணுவத்தினர்

கொழும்பு, நவ. 29
வசந்தபுரம் தாழ்வு நிலப்பகுதி யில் வெள்ளநீர் வீட்டுக்குள் புகுந்த நிலையில் விரைந்து சென்று மீட்புப் பணியில் இரா ணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டனர்.
மீட்கப்பட்ட மக்கள் தற்போது கரி வேலன்கண்டல் பாடசாலை இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# பள்ளத்தில் பாய்ந்த கார் நால்வர் படுகாயம்

கொழும்பு, நவ. 29
கெப்பெட்டிபொல பொரலந்த பிரதான வீதியில் போகஹகும் புர பிரதேசத்தில் கார் ஒன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத் துக்குள்ளானதில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த நால்வர் காயம டைந்துள்ளதாக போகஹகும் புர பொலிஸார் தெரிவித்துள்ள னர்.
இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை போகஹகும்புர பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ச-இ)

# வடிகாலில் வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 29
கொழும்பின் புறநகர்ப் பகுதியில் நீர் நிரம்பிய வடிகாலில் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந் துள்ளார்.
கொஸ்வத்த, மாவத்தகம கைத் தொழில் நிலையத்தில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மடு முல்லை, உடபுஸ்ஸல்லாவ பகு தியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். (ச-இ)



# பெரும் பாதிப்பில் மன்னார் மாவட்டம்

## 50 ஆயிரம் பேர் வரை பாதிப்பு அவசர கலந்துரையாடல்

**மன்னார், நவ. 29**
**நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக வடமாகாணமும் பாதிக்கப்பட்டுள்ள தோடு, மன்னார் மாவட்டமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.**

இந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனின் ஏற் பாட்டில், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அநுர ஜெயசேகர தலைமையில் அவசர கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் ந.வேதநாயகன், இரா ணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படை, பொலிஸ் உயரதிகாரிகள், திணைக் களத்தலைவர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு,பிரதேச செய லாளர்கள் கலந்துகொண்டனர்.
இதன்போது மன்னார் மாவட்டத்தில் இதுவரை 14 ஆயிரத்து 237 குடும் பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 560 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் மாவட்டத்தில் அமைக்கப்பட் டுள்ள 25 நலன்புரிநிலையங்களில் சுமார் 2 ஆயிரத்து 100 நபர்கள் வரை தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
தொடர்ந்தும் மழை பெய்து வரு கின்றமையினால் மன்னார் மாவட் டத்தில் இடம் பெயரும் மக்களின் தொகை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டது. அனர்த்தத்தின் போது மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்தம், பாதிக்கப்பட்ட மக் களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவது குறித்தும் கலந்துரை யாடப்பட்டன. (ச-25, 56)

# திருகோணமலையில் 4851 பேர் பாதிப்பு

திருகோணமலை, நவ.29
சீரற்ற வானிலை காரணமாக திருகோண மலை மாவட்டத்தில் 1708 குடும்பங்களைச் சேர்ந்த 4851 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
பலத்த மழை, வெள்ளம் காரணமாக 65 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேர் பாதுகாப் பான இடங்களில் தங்கியுள்ளனர். 532 குடும்பங்களைச் சேர்ந்த 1,621 பேர் உறவி னர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். மேலும், திருகோணமலை மாவட்டத்தில் 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிர திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)





யாழில் தொடரும் மழை காரண மாக யமுனா ஏரிப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் முன்னணியின் செயற் பாட்டாளர்களில் ஒருவரான கனகசபை விஷ்ணுகாந்தின் நண் பர்களின் ஏற்பாட்டில் யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை உணவுகள் வழங்கிவைக் கப்பட்டன. (ரி-20)



# மரங்கள் நடுகை

சாவகச்சேரி, நவ. 29
விதைப்பதும் முளைப் பதும் கார்த்திகையில் எனும் தொனிப்பொரு ளில் ஆண்டுதோறும் பசுந்தேசம் அமைப் பும், இயற்கையின் நண்பர்கள் இயக்க மும் இணைந்து நடத்திவரும் மரநடு கையின்தொடர்ச்சி யாக கைதடி ஆயுர் வேத மருத்துவமனை முன்றலில் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் மரங்களை நடுகை செய்தார். (ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 06 . 1947



மறைவு
27 . 11 . 2024

## சூரியகுமார் கமலபூபதி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, அத்தியடி, Canada ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சூரியகுமார் கமலபூபதி நேற்றுமுன்தினம் (27.11.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் - பூரணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சூரியகுமார் அவர்களின் அன்பு மனைவியும், சியாமினி, சதீஸ்குமார், துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஸ்ரீதயாநந்தன் மற்றும் மதிவாணன், உசாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டெபோரா, மதுரா, சேயோன், நெளமி, எலானா, சூர்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தர்மராஜா, விஜயராணி, இராஜேஸ்வரி, ஜெயசீலன், அருந்தவராணி மற்றும் விஜயலட்சுமி, செல்வரஞ்சிதம், ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேந்திரகுமார், கலையரசி மற்றும் சுரேஸ்குமார், விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு அண்ணியாரும், அம்பிகா, ஸ்ரீவள்ளிநாயகம்பிள்ளை, பேபி, நிர்மலாதேவி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், குணரட்ணம், சந்திரசேகரம், பொன்னுச்சாமி மற்றும் பேபிசரோஜா, அம்பிகாபதி, சாந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10 / 1, Ambalavanar Road,
Aththiyady.
T.P.: 076 910 4096

தகவல்:
பெறா மகன்
ச.ஞானசேகரம்

(CS/56776) N-1)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2025.01.03 ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## சேவை நிபந்தனைகள்

01. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
02. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
03. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
04. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
05. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

## அடிப்படைத் தகைமைகள்

01. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
02. நீதிமன்றங்களில் வழக்குகளைக் கையாளுதல் தொடர்பாக குறைந்த பட்சம் 05 ஆண்டுகள் முனைப்பான சேவைக்காலத்தைக் கொண்ட முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

## கொடுப்பனவு விபரம்

01. மாதாந்த கொடுப்பனவு ரூபா 150,000 ஆகும்.
02. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
03. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

## தெரிவு செய்யப்படும் முறை

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

## விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 13.12.2024**

ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
29.11.2024

(cr.43792) (N-1)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கனகசிங்கம்



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகசிங்கம் அவர்கள் நேற்று (28.11.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற விநாசித்தம்பி – பார்வதி தம்பதியரின் மருமகனும், இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், வேழவேந்தன், செந்தூரன் (கனடா), சுகந்தன் (உரிமையாளர், Venkadeswara Agro Industry (Pvt) Ltd. & Venkadeswara Express), சுகந்தினி, அருண் (பிரான்ஸ்), தவலோஜினி (பிரதி ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, சர்வாம்பிகை (கனடா), பாமினி, ஸ்ரீசுகந்தராஜா (கனடா), பவித்திரா (பிரான்ஸ்), நிரோஜன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம் கோப்பாய் மற்றும் வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயில்வாகனம், காலஞ்சென்ற இராசம்மா, தம்பிராஜா மற்றும் கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மகிந்தன், சயந்தன், விஹாசினி, அஷ்வியா, அபினேஷ், சமிதா, அபிஷேக், விபின், ஸ்ரீஅஞ்சலா, ஸ்ரீ அஞ்சலோ, அஜ்வி, அத்விக், பிரவிந், மற்றும் கேசரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோற்றம்
04.05.1940

மறைவு
28.11.2024

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
வேழவேந்தன் : 077 712 2590
சுகந்தன் : 077 774 3578
தவலோஜினி : 077 290 3314
அருண் : + 33 605 622 237
செந்தூரன் : + 1(416) 8233092

(CS/56781) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் 10 ஆண்டுகள்

தோற்றம்
17 . 03 . 1951



மறைவு
20 . 11 . 2014

பொன்னாலையூர்
**அமரர் வேலாயுதர் இரத்தினம்**
**(இரத்தினம் விதானையார்)**
**திதி: கார்த்திகை சதுர்த்தசி**

இனி ஒரு ஜென்மம் வேண்டும் என்று
எண்ணியதில்லை
ஆனால் அவ்வாறு நிகழ்ந்தால் மறுபடியும்
உங்கள் பிள்ளைகளாக பிறக்கும்
வரம் மட்டும் போதும் அப்பா.!

*என்றும் நினைவில்*
**பொன்னாலை.** **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 03 . 1947



மறைவு
27 . 11 . 2024

## வைத்திலிங்கம் சிவநாதன்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர், யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

தாவடியைப் பிறப்பிடமாகவும் இல.15 செட்டி வளவு வீதி, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவநாதன் நேற்றுமுன்தினம் (27.11.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பர்வதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சுப்பையா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், செந்தூரான் (வடமாகாண இணைப்பாளர் பிரிட்டிஸ் கவுன்சில்), திருக்குமரன் (பொறியியலாளர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வினோதா (ஆசிரியர் - யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), ஆர்த்திகா (பெறுகை நிபுணர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகித் (தரம் - 10, யா/ இந்துக்கல்லூரி), ஸோபினி (தரம் - 7, யா/ வேம்படி மகளிர் கல்லூரி), சகானா, தீரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிற்றம்பலம், புவனாம்பிகை, பொன்னாம்பிகை மற்றும் கமலாம்பிகை (கனடா), யோகேந்திரராணி, இராஜலட்சுமி, குணநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தராதேவி, சிவகுமாரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சண்முககுமார் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்), சண்முககுலகுமாரன் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.15, செட்டிவளவு,**
**இணுவில் மேற்கு.**
(cs.56773) (N-1)
தகவல்:
**குடும்பத்தினர்**



பருத்தித்துறையில்

# இரு இடங்களில் தாழிறங்கிய வீதி

யாழ்ப்பாணம், நவ. 29

சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சி கடற்பரப்பு மிகவும் கொந்தளிப்புடன் காணப்பட்டு வரும் நிலையில் கடற்கரை வீதியில் இரு இடங்களில் வீதி தாழிறங்கியுள்ளது. அத்துடன் கடல் அரிப்பின் மூலம் வீதி முற்றிலுமாக சிதைவடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. சூறாவளியின் தாக்கம் காரணமாக வடமராட்சி கரையோரங்களில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு முதல் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

இதன் போது பருத்தித்துறை துறைமுக பகுதி மற்றும் சக்கோட்டை சவேரியார் தேவாலயத்துக்கு முன்பாக என இரு இடங்களில் குறித்த வீதியோர மாக அமைக்கப்பட்டிருந்த கடற்கரை அணை உடைப்பெடுத்ததன் காரணமாக வீதி தாழிறங்கியுள்ளது. அதே வேளை திக்கம் பகுதியில் ஏற்கனவே கடலரிப்பினால் சிதைவடைந்து ஆபத்தான நிலையில் காணப்படும் கடற்கரை அணை எப்போது வேண்டுமானாலும் உடைந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது. எனினும் குறித்த வீதியூடான 751, 763 வழித்தடங்களில் பயணிக்கும் பயணிகள் பேருந்து சேவை அபாய நிலைக்கு மத்தியிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

வீடுகளுக்கு வந்து கற்பித்தல்
A/L - வரையான வகுப்புக்களுக்கு
தமிழ், ஆங்கில மொழிமூலம்
கணக்கீடு, புவியியல், குடியியல்,
வரலாறு, ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
077 331 6402

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING – 2025**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Friday, 10th January 2025 at 11.30 a.m. at the Simulation Centre, Teaching Hospital Jaffna for the following purposes:

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2024 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for the year 2025.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,

Honorary Secretary
29th November 2024

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**29.11.2024**
**ரூத் யோகராணி**
**பன்னீர்ச்செல்வம்**
*6/1, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணம்*



தோற்றம் 10.06.1964 மறைவு 29.11.2022

அன்பின் தங்கையே ஆண்டுகள் ஆயிரம்
ஆனாலும் நாம் உங்கள் அன்போடு...

**நினைவுகூருவோர்: மகன்**
**- அஷான் பன்னீர்ச்செல்வம் (கொழும்பு)**
மற்றும்
**சகோதர்கள்** - 077 331 6402 (cs.56775) (N.1)

# காணவில்லை



கடந்த 21.11.2024 வியாழக்கிழமை மருத்துவமனைக்குச் சென்ற மனநலம் பாதிக்கப்பட்ட
**தேவராசா செல்வநாயகி**
**வயது 56**
என்பவரைக் காணவில்லை
கண்டவர்கள் தயவுசெய்து
தொடர்புகொள்ளவும்.
**076 129 5925**
(CS/56780) J-1

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையில் சிரேஷ்ட பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.பரமசிவம் பத்மநாதன்** அவர்களின் அன்புத் தாயார்

## நாகேஸ்வரி பரமசிவம்

அவர்கள் கடந்த 26.11.2024 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**புவியியற்றுறை சமூகம்**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
(cs.56778) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிசா' புயல் போன்றதே 'பெங்கால்' புயல் பாதிப்பும்

## *16 ஆண்டுகளுக்குப் பிறகு வடக்கு- கிழக்கில் மீண்டுமொரு அனர்த்தம்!*

**யாழ்ப்பாணம், நவ. 29**

**கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிசா புயலுக்கு பிறகு ஒரு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திய தாழமுக்க புயலாக இந்த பெங்கால் புயல் அமைந்துள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை தலைவரும், வானிலை ஆய்வாளருமான கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடகீழ் பருவக்காற்றுக் காலப் பகுதியில் வங்காள விரிகுடா தாழமுக்கங்கள் ஏற்படுவது வழமையானது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் கடந்த 2008 ஆம் ஆண்டுஏற்பட்ட நிசா புயலுக்கு பிறகு ஒரு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திய தாழமுக்கப் புயலாக இந்த 'பெங்கால்' புயலைக் கூறலாம்.

கடந்த 16 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு மிகப்பெரிய இயற்கைய அனர்த்தத்தை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் எதிர் கொண்டுள்ளன. பொதுவாகவே கடந்த 23ஆம் திகதி தாழமுக்கம் தோற்றம் பெற்றதில் இருந்து மீனவர்களை தொடர்ச்சியாக கடலுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. நாளை 30 ஆம் திகதி வரைக்கும் அவர்கள் இந்த நிலைமையை பின்பற்றவேண்டும். 30 ஆம் திகதிக்குப் பின்னரே நிலைமை சீராகும் என எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (ச-27)



## பருத்தித்துறையில் 2,800 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

அண்மைய நாள்களாக நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 829 குடும்பங்களைச் சேர்ந்த 2,800 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 7 இடைத்தங்கல் முகாம்களில் 296 குடும்பத்தைச் சேர்ந்த 1,470 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு மூன்று நாள்களுக்குத் தேவையான சமைத்த உணவுகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் சிலர் உறவினர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார். (ச-33-100)

## வவுனியாவில் இடர்நிலை அவசர கலந்துரையாடல்

வவுனியா, நவ. 29

வவுனியாவில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதியமைச்சர் உபாலிசமரசிங்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப்பாதிப்புகள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன,

குறித்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியூதீன், காதர் மஸ்தான், ம.ஜெகதீஸ்வரன், து.ரவிகரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம் மற்றும் மாவட்டச் செயலர் பி.எ.சரத் சந்திர, பிரதேச செயலாளர்கள்,அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தரப்பினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-110)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.29

கரவெட்டி தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா அதிபர் க. ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை சிவனேசன் கலையரங்கில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவையாளர் லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டிக் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பாலகிருஷ்ணன் கலைவாணி, பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி சசிகலா சூரியகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-33)









## உலருணவுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அராலியைச் சேர்ந்த 57 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலருணவுப் பொருள்கள் நேற்று வியாழக்கிழமை அராலி கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-33,66)

## 3,812 குடும்பங்கள் கிளிநொச்சியில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.29

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 3812 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 728 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 25 வீடுகள் சேதமடைந்த நிலையில் 298 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 570 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் .

அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருவதன் காரணமாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட பல விவசாயிகளின் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

தொடர்ந்தும் தங்கவைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

நேற்று மாலை வரையிலான நிலவரத்தின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில் 19 ஆயிரத்து 560 குடும்பங்களைச் சேர்ந்த 64 ஆயிரத்து 621 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 161 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும் 77 பாதுகாப்பு நிலையங்களில் 2 ஆயிரத்து 113 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 271 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பெரும் ஆறுதல் தரும் விடயமாக, யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வெள்ளம் வடிந்தோட ஆரம்பித்துள்ளது.

**வவுனியா**

வவுனியாவில் ஆங்காங்கே நேற்றுக் காலை மழையுடனான காலநிலை நீடித்தாலும், நேற்று மாலைக்குப் பின்னர் மழை நிலைமை நீங்கியது. இதையடுத்து, தாழ்நிலப் பகுதிகளில் இருந்து வெள்ளநீர் வடிந்தோடி வருகின்றது. நேற்று மாலை வரையிலான நிலவரத்தின் அடிப்படையில் ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 822 பேர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 126 குடும்பங்களைச் சேர்ந்த 390 பேர் இடைத்தங்கல் முகாம்களிலும் 3 ஆயிரத்து 68 பேர் உறவினர் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முகாம்களில் உள்ளவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன. 55 குளங்களில் உடைவுகள் ஏற்பட்டிருந்த நிலையில், அவற்றைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் நேற்றுக் காலைமுதல் முன்னெடுக்கப்பட்டன.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 210 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 263 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் 69 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தொடர்ச்சியாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மன்னார் மாவட்டச் செயலகத்தில் வெள்ளப் பேரிடர் தொடர்பான சிறப்புக்கூட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உலருணவுகளை வழங்குவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவுக்கு நெருக்கமாக புயல் நகர்ந்ததால், நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்றுப் பின்னிரவு வரை கடும் காற்று மற்றும் மழையுடனான காலநிலை நீடித்தது. அங்கு ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் மிகையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவுக்கான போக்குவரத்துத் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. மிகவும் ஆபத்தான பயணத்தின் ஊடாகவே அங்கு செல்லக்கூடிய நிலை காணப்படுகின்றது. முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் பூட்டப்பட்டுள்ளதால் இன்று வெள்ள நிலைமை முல்லைத்தீவில் குறைவடையும் என்றும், நந்திக் கடல் ஊடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தை மையப்படுத்தி வெள்ளப் பேரிடர் நிலை தோற்றம் பெற்றுள்ளது. இரணைமடு வான் கதவுகளை மீண்டும் பூட்டுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

(அ.ம.26,125,20,110,56,66,60,113,100)

## ‘பெங்கால்’...

நேற்றுமுன்தினம் வடக்குக் கடற்பரப்பை நோக்கி நகர்ந்துவந்த பெங்கால் புயல் நேற்று அதிகாலை முதல் வடக்குக் கடற்பரப்பை விட்டு விலகிப் பயணிக்க ஆரம்பித்தது. இதனால், கடும் மழையுடனான காலநிலை நீங்கி, கடும் குளிருடனான காலநிலை நிலவியது.

நேற்றுக் காலை மணித்தியாலத்துக்கு அவ்வப்போது 3 முதல் 5 கிலோமீற்றர் வரையிலான வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்த புயல், நேற்று இரவு மணித்தியாலத்துக்குப் 12 தொடக்கம் 16 கிலோமீற்றர் வரையிலான வேகத்தில் தமிழகத்தின் தென்மாநிலங்களை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது. எனினும், அது தீவிர புயலாக மாறாது என்று இந்திய வானிலை கண்காணிப்பகங்கள் அறிவித்துள்ளன.

இதன்படி பெங்கால் புயலை 'தற்காலிக புயல்' என்று இந்திய வானிலை கண்காணிப்பகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. ஏனெனில், இந்தப் புயல் இன்று இரவு முதல் வலுவிழந்து புயல் நிலையாக அல்லாமல் மீண்டும் காற்றமுத்தத் தாழ்வு மையமாகவே (புயலுக்கு முன்னரான நிலை) கரையைக் கடக்கும் என்பதால்தான் இதை 'தற்காலிக புயல்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

பெரும்பாலும் காரைக்கால் முதல் மாமல்லபுரத்துக்கு இடைப்பட்ட பகுதியிலேயே இந்தப் புயல் கரையைக் கடக்கும் என்று நேற்று இரவு ஒரு மணியளவில் எதிர்வுகூறப்பட்டிருந்தது. புயலின் பயணப்பாதையில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்தப் புயல் இந்தியாவின் தென்மாநிலங்களில் மோதி அல்லது அவற்றுக்கு அருகாகச் சென்று மீண்டும் இலங்கையின் வடக்கு நோக்கித் திரும்பலாம் என்று ஒரு தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ள போதிலும், அதற்கு சாத்தியங்கள் குறைவு என்றே இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(அ-ம-இ)

## சீனாவுடனான...

மற்றும் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதன்போதே சீனாவுடனான உறவுகள் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் சபாநாயகர் ரன்வல கூறியுள்ளார்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜியின் வாழ்த்துகளை சீனத் தூதுவர், சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல விடம் தெரிவித்தார். இதன்போதே, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால ஒத்துழைப்புகளை நினைவு கூர்ந்த சபாநாயகர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார அபிவிருத்தி, கலப்பின விதைவகைகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தப்பட்ட விடயங்கள், நீர் முகாமைத்துவம், மசகு எண்ணெய் சுத்திகரிப்பு, வெளிநாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (அ-ம-44)

## மீண்டும்...

கள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

சீரற்ற காலநிலையால் மூன்று நாள்களுக்கு உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. தற்போது மேலும் மூன்று நாள்களுக்குப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி டிசம்பர் 3ஆம் திகதிவரை பரீட்சைகள் நடைபெறமாட்டாது. டிசெம்பர் மாதம் 4ஆம் திகதியில் இருந்து பரீட்சைகள் ஆரம்பமாகும். பிற்போடப்பட்ட நாள்களுக்கான பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ளன.

இதன்படி, நவம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 21ஆம் திகதியும், நவம்பர் 28ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 23ஆம் திகதியும், நவம்பர் 29ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 27ஆம் திகதியும், நவம்பர் 30ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 28ஆம் திகதியும், டிசெம்பர் 2ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 30ஆம் திகதியும், டிசெம்பர் 3ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் 31ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. நத்தார் பண்டிகையைக் கருத்திற்கொண்டு டிசம்பர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளிலும் பரீட்சைகள் நடைபெறமாட்டாது - என்றார். (அ-ம-44)

## காணிகள்...

ளார். யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த செயலர் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்துகொண்டார். இதன்போது யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரின் பாவனையில் உள்ள 2 ஆயிரத்து 700 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுமா? என்று அவரிடம் வினவப்பட்டது. இதன் போதே, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் மீதமுள்ள காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

காணிவிடுவிப்புத் தொடர்பில் நாம் சிந்தித்து வருகின்றோம். எதிர்காலத்தில் நாங்கள் சரியான மதிப்பீட்டை மேற்கொள்வோம். நிச்சயமாக சாதகமான விடயத்தில் நாம் முடிவெடுப்போம். விரைவில் இது தொடர்பான அடுத்தகட்ட அறிவிப்புகள் விடுக்கப்படும். ஏற்கனவே சில வீதிகளை நாம் விடுவித்துள்ளோம். பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைப்பதிலும், அவர்களின் நலன்களை பிரதானப்படுத்திச் செயற்படுவதிலும் நாம் கரிசனையுடன் உள்ளோம் - என்றார். (அ-ம-125)

## சீரற்ற...

மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கருத்துகளின் அடிப்படையில், பாதிக்கப்பட்டவர்களை விட, எட்டுப் பேர் வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இடரால் உயிரிழந்துள்ளனர். 13 பேர் படுகாயமடைந்த நிலையில் 4 பேர் காணாமல் போயுள்ளனர். 91 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 662 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 431 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 695 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மழை, வெள்ளத்தால் வடக்கு மாகாணத்தில் 37 ஆயிரத்து 385 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 640 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-ம-47)

## தவறி...

சிரந்தஹசன் குணவர்த்தன (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி தனது நண்பன் ஒருவருடன் மகாகச்கொடி குளத்தில் நீராடச் சென்றபோது இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. இரண்டு நாள்களாகத் தேடுதல் நடத்தப்பட்டபோதிலும், அந்த இளைஞர் மீட்கப்படவில்லை. இதையடுத்தே அவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ம-110)

## தொன்...

நீர்மாசுபாடு பெரியளவில் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தொன் கணக்கான குப்பைகள் இவ்வாறு கடலுடன் கலந்துள்ள நிலையில், கடற்கரைப் பகுதிகளில் பல கிலோமீற்றர்களுக்குக் குப்பைகளும், கழிவுகளும் மிதப்பதை அவதானிக்க முடிகின்றது. (அ-ம-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைத்துள்ள கட்டடங்களை அகற்றுக

## வடக்கு ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தொடர்பில் ஆராயும் இணையவழிக் கலந்துரையாடல் இன்று (நேற்று) வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள இடர் பாதிப்புகள் தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்கள் மற்றும் மேலதிக மாவட்டச் செயலர்களால் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

குறிப்பாக அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் பகலில் துண்டிக்கப்பட்டு இரவில் மாத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. மின்சார விநியோகத்துக்கு தேவையான எரிபொருள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் உள்ளதாகவும், கடல் பயணத்துக்கு ஏதுவான நிலைமை ஏற்பட்டதும் அவற்றை உடனடியாக கடற்படையினரின் உதவியுடன் கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் இதன்போது தெரிவித்தார்.

தற்போது பல வெள்ள வாய்க்கால்களில் வெள்ளம் நிரம்பிய நிலையில் இருப்பதால் அதனுள் குப்பைகளைக் கொட்டுவதற்கு முயற்சிக்கக் கூடும் எனவும் அது தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் யாழ்.மாநகர சபையின் ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வெள்ளம் வடிந்தோடாமல் இருப்பதற்கு வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்துச் சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் காரணம் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அவற்றை அகற்றத் துரித நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார். அதேபோன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய கட்டடங்களையும் அகற்றுமாறும் ஆளுநர் பணித்ததுடன் திரும்பத் திரும்ப இந்த விடயங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை எனவும் குறிப்பிட்டார். அடுத்த ஆண்டு இந்த விடயங்கள் அனைத்தும் சீராக்கப்பட்டிருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடிய பின்னர் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்குரிய ஆயத்தங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதேவேளை நோய் நிலைமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்குரிய ஏற்பாடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரியப்படுத்தினார்.

தொடர்மழை காரணமாக பெருமளவு பயிர்கள் அழிவடைந்துள்ளதாகவும், வெள்ளம் இன்னமும் வழிந்தோடாமல் இருப்பதால் பயிரழிவு தொடர்பில் சரியான மதிப்பீட்டைத் தற்போது முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் இந்தக் கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார். (ம-66)



## உலருணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், நவ.29

பெய்து வரும் கனமழை காரணமாக பண்டத்தரிப்பு ப. தெ. வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாதிக்கப்பட்ட தமது அங்கத்தவர், பணியாளர்களுக்கான 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கிவைத்தது. (ச-45-63)

## நிவாரணப் பணிக்கு கைகோருங்கள்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வெள்ள நிவாரணப் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

குறித்த நிவாரணப் பணிகளில் இணைந்து பணியாற்றவும், பங்களிப்புச் செய்யவும் விரும்புவோர் 0777222600 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

## ஹெலிகொப்டரில்...

விமானப் படையினரின் ஒத்துழைப்புடன் நெடுந்தீவிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து தரைவழிப் பாதை ஊடாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-125-26-66)

## கொள்கை...

10ஆவது நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய கொள்கை விளக்க உரைமீது நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது. இதன்படி டிசெம்பர் மாதம் 3ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் மேற்படி விவாதத்துக்கு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய டிசெம்பர் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் கொள்கைப் பிரடகனம் குறித்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டு, மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை விவாதிக்கப்படவுள்ளது. டிசெம்பர் 4ஆம் திகதியும் குறித்த பிரேரணை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5 மணி வரை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றையதினம் பி.ப 5 மணிக்கு வாக்கெடுப்பை நடத்துவதற்கும் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

டிசெம்பர் 5ஆம் திகதி வியாழக்கிழமை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கை வாக்கெடுப்புக் குறித்த தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய டிசெம்பர் 5ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை விவாதம் நடத்தப்படவுள்ளது. இது பற்றிய விவாதத்தை 6ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரையும் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ-ம-44)

## இப்போதைக்கு...

உள்ளூராட்சித் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போது கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னரே உள்ளூராட்சித் தேர்தலைப்பற்றி சிந்திக்கலாம். உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு 8 பில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாகத் தேவை என்று எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை. எனவே உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குரிய 8 பில்லியனை ஒதுக்குவதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்ததும் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் - என்றார். (அ-ம-6)

## வடமராட்சியில்...

இதனால், வீடுகளின் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வீடுகளின் கூரைகளும் காற்றில் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

வியாபாரிமூலை மயிலிட்டி முகாம் பகுதியில் சில வீடுகளின் கூரையும், மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தின் கூரைத் தகரங்களும் தூக்கி வீசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை துறைமுக பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரது உணவகத்தின் முன்பக்கக் கூரையும் தூக்கிவீசப்பட்டுள்ளது. இதேபோன்று திக்கம் இந்து மயானத்தின் கூரையும் தூக்கி வீசப்பட்டுள்ளது. (அ-ம-100)







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org